# சுவடு

## வெளியீடு - 14

**பழைய மாணவர் சங்கம்,**

**யா / கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி**

**கோப்பாய்.**

27.12.2015

# யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி

## பழைய மாணவர் சங்கம் நடாத்தும்

## அமரத்துவ அதிபர் தினம் – 2015

இடம் :- பாடசாலை பிரதான மண்டபம்

காலம் :- 27.12.2015 ஞாயிற்றுக்கிழமை

நேரம் :- பி.ப 4.00 மணி

தலைவர் :- திரு.ச.வேலழகன் *(அதிபர்)*

பிரதம விருந்தினர் :- சாமஸ்ரீ வே.சண்முகலிங்கம்

*(பழைய மாணவர், மாவட்ட சாரணர் ஆணையாளர், பருத்தித்துறை)*

## நிகழ்ச்சி நிரல்

- அகவணக்கம்
- அமரத்துவ அதிபர்களின் உருவப்படத்திற்கு மாலை அணிவித்தல்
- ஈகைச்சுடர் ஏற்றல்
- தலைமையுரை
- பிரதம விருந்தினர் உரை
- நன்றியுரை

**அனைத்து பழைய மாணவர்களையும்**
**அன்புடன் அழைக்கின்றோம்.**

*பழைய மாணவர் சங்கம்*
*யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி.*

# யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி
# பழைய மாணவர் சங்கம் 2015/2016
## நிர்வாக சபை உறுப்பினர் விபரம்

| | | |
|---|---|---|
| **போஷகர்** | : | திரு.N.சிவநாதன் |
| **தலைவர்** | : | திரு.S.வேலழகன் (அதிபர்) |
| **செயலாளர்** | :- | திரு.S.சேரரூபன் |
| **உப செயலாளர்** | :- | திருமதி.S.செல்வறஞ்சினி |
| **பொருளாளர்** | :- | திரு.S.அருந்தவரட்ணம் |
| **உப தலைவர்கள்** | :- | திரு.K.விநாயகலிங்கம் |
| | | திரு.S.குணதாசன் |
| | | திரு.V.சண்முகலிங்கம் |
| | | திரு.A.துஷ்யந்தன் |
| | | திரு.K.கிருபாகரன் |
| **நிர்வாக உறுப்பினர்கள்** | :- | திரு.S.புவனேந்திரன் |
| | | திரு.K.இராஜகோபால் |
| | | திரு.K.திருச்செல்வம் |
| | | திரு.V.சுப்பிரமணியம் |
| | | செல்வி.M.கந்தையா |
| | | திருமதி.இ.அருந்தவநாதன் |
| | | திரு.M.றஜீவன் |
| | | திரு.S.செல்வச்சந்திரன் |
| | | திரு.K.சிவகுமார் |
| | | திரு.R.ரகுமார் |
| | | திரு.B.சசிக்குமார் |
| | | திரு.S.ராஜபாலசிங்கம் |
| | | திரு.K.நந்தராஜன் |
| **பத்திராதிபர்** | :- | திரு.K.V.குணசேகரம் |
| **கணக்காய்வாளர்** | :- | திரு.இ.இராசதுரை |

# அமரத்துவ அதிபர்கள்

| | | | |
|---|---|---|---|
| திரு.G.S.செல்லையா | 01.01.1945 | – | 30.04.1951 |
| திரு.T.W.இராசசேகரம் | 01.05.1951 | – | 31.07.1957 |
| திரு.E.C.A.நவரட்ணராசா | 01.09.1957 | – | 27.12.1963 |
| திரு.E.K.சண்முகநாதன் | 28.12.1963 | – | 31.05.1971 |
| திரு.S.சிவசுப்பிரமணியம் | 01.01.1972 | – | 11.07.1973 |
| திரு.S.செல்வரட்ணம் | 07.10.1980 | – | 27.10.1983 |
| திரு.N.சிவகடாட்சம் | 19.08.1996 | – | 11.10.2005 |
| திரு.S.கந்தசாமி | 01.09.1973 | – | 26.12.1974 |

# சுவடு

| | இதழ் வெளியிடப்பட்டது | ஆசிரியர் |
|---|---|---|
| 1. | 27.12.1997 | திரு.S.K.தங்கவடிவேல் |
| 2. | 27.12.1998 | திரு.ஆ.ஜெயபாலசிங்கம் |
| 3. | 20.02.2002 | திரு.இ.ரகுமார் |
| 4. | 27.12.2004 | திரு.S.தங்கவடிவேல் |
| 5. | 27.12.2005 | திரு.S.தங்கவடிவேல் |
| 6. | 27.12.2007 | திரு.சி.சிவலிங்கம் |
| 7. | 27.12.2008 | திருமதி.உ.சுரேந்திரகுமார் |
| 8. | 27.12.2009 | திரு.சி.சிவலிங்கம் |
| 9. | 27.12.2010 | திரு.சி.சிவலிங்கம் |
| 10. | 27.12.2011 | திரு.சி.சிவலிங்கம் |
| 11. | 27.12.2012 | திரு.சி.சிவலிங்கம் |
| 12. | 27.12.2013 | திரு.சி.சிவலிங்கம் |
| 13. | 27.12.2014 | திரு.ஜே.கியூபேட் |
| 14. | 27.12.2015 | திரு.கே.வி.குணசேகரம் |

# கல்லூரி முதல்வரின் உள்ளத்திலிருந்து...

அனைவருக்கும் தரமான கல்வி என்ற இலக்கு முன்னெடுக்கப் படும் இன்றைய கால கட்டத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். "உண்மைக்கும் நேர்மைக்கும்" என்ற மகுடவாசகத்திற்கு ஏற்ப நல்ல ஒழுக்க சீலர்களையும், பண்பாட்டாளர்களையும் சமூகத்திற்கு வழங்கி வருகின்றது எமது கல்லூரி.

கல்வியினூடாகவும் இணைப்பாடவிதான செயற்பாடுகளுக் கூடாகவும் ஆளுமைமிக்க பிரஜையைச் சமூகத்திற்கு வழங்கும் உயரிய பணியை ஆற்றி வருகின்ற இக்கல்லூரிக்கு சமூகத்தின் ஆதரவு இன்றியமையாதது. அந்த வகையில் பாடசாலை வளர்ச்சிக்குப் பக்க பலமாக விளங்கும் பழைய மாணவர்கள் ஆற்றும் பணிகள் ஏராளம்.

அனுபவமும் ஆளுமையும் மிக்க வலுவான பழைய மாணவர் சங்கம் எமது கல்லூரியின் வளர்ச்சிக்காகத் தம்மை அர்ப்பணித்துப் பணியாற்றுவது மகிழ்வுக்குரிய விடயமாகும்.

அமரத்துவ அதிபர்களை நினைவுகூர்ந்து அவர்களுக்காக எடுக்கும் விழாவில் "சுவடு" எனும் சஞ்சிகையைப் பழைய மாணவர் சங்கத்தினர் வெளியிட்டு வருகின்றனர்.

வலுவான பிற்புலத்துடன் இயங்கிவரும் இக்கல்லூரி சமூகத்திற் காக ஆற்ற வேண்டிய சேவைகளும் பணிகளும் ஏராளமானதாகும். பல சாதனைகளை ஈட்டிவரும் நிலையில் சில மாணவர்களின் வரவுச்


சீரின்மையாலும் பெற்றோர்களின் அக்கறையீனத்தினாலும் பாடசாலையின் ஒட்டு மொத்த அடைவு மட்டத்தை மேம்படுத்துவதில் இடர்கள் ஏற்படுகின்றன.

பல்வேறுபட்ட சவால்களை எதிர்கொண்டு பாடசாலையை உயர் நிலைக்கு இட்டுச்செல்லப் பாடுபட்ட அதிபர்கள் போற்றுதற்குரிய வர்கள்.

இவ்வருடமும் தெரிவுசெய்யப்பட்ட பழைய மாணவர் சங்கத்தினரின் உழைப்பில் "சுவடு" எனும் சஞ்சிகை உருவாக்கம் பெற்றுள்ளது. அந்த வகையில் அவர்களைப் பாராட்டுவதுடன் எமது கல்லூரியை முன்மாதிரிப் பாடசாலையாக மாற்ற ஆசிரியர்கள் மற்றும் பழைய மாணவர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள் உழைப்பையும் ஆதரவையும் முழுமனதுடன் வரவேற்கின்றேன்.

நன்றி.

**திரு.ச.வேலழகன்**
**அதிபர்**
**யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி.**



# கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின் சாரணர் இயக்கம்

இலங்கையில் சாரணியம் 1912ல் ஆரம்பிக்கப்பட்டது. யாழ்ப்பாணத்தில் 1916ல் ஆரம்பிக்கப்பட்டது. கோப்பாயில் 1921ல் 10ம் குழுவாக ஆரம்பிக்கப்பட்டது. (யாழ் மாவட்டத்தில்) தரு சின்னம் பெற்ற சாரணர் ஆசிரியர் இல்லாத காரணத்தினால் ஜனாதிபதி சாரணர் தரத்திற்குச் சாரணர்கள் வரமுடியாத நிலைமையில் இருந்து வந்திருக்கின்றார்கள்.

1951 – 1954 வரை மா.புவனேந்திரனாகிய நான் சாரணர் இயக்கத்தில் இணைந்து சின்னம் சூட்டப்பட்டு 2ம் வகுப்பு சாரணனாக இருந்திருக்கின்றேன். 1953ல் இலங்கை மகாதேசாதிபதி கௌரவ சோல்பெரிபிரபு அவர்கள் இருபாலை மகா வித்தியாலயத்திற்கும், கோப்பாய் ஆசிரியர் கலாசாலைக்கும் விஜயம் செய்த போது எம் கல்லூரிச் சாரணர் குழு அணிவகுப்பு மரியாதை செய்தது. அதனை தொடர்ந்து சேர் ஜோன் கொத்தலாவல இலங்கை பிரதம மந்திரி கோப்பாய் அரசினர் வைத்தியசாலையை திறந்து வைத்த நிகழ்வில் எமது சாரணர் குழு அணி வகுப்பு மரியாதை வழங்கியது. அப்போது சாரணர் ஆசிரியராக திரு.தம்பு, திரு.T.செல்வராசா, திரு.செல்வம் செல்லையா ஆகியோர் இருந்தார்கள். 1960ல் யாழ் மாவட்டச் சாரணர்களுக்கு பயிற்சி வகுப்பு நடத்தப்பட்டது. திரு.P.K.இராசரத்தினம், திரு.த.முத்துக்குமாரசாமி, திரு.ந.சிவகடாட்சம் ஆகியோர்களின் காலத்தில் இருந்தும் தொடர்ந்து இன்று வரையும் சாரணர் அமைப்பு நடைபெற்று வந்துள்ளது.

சாரணர் ஆசிரியர் தரு சின்னம் பெற்றவர் திரு.V.சண்முகலிங்கம் ஆசியராகவும், மாவட்ட ஆணையாளராகவும்,

கடமையாற்றுகின்றது கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின் சாரண வளர்ச்சிக்கு உறுதுணையாகும். 2014ல் முதல் முறையாக இரண்டு சாரணர்கள் பார்த்தீபன் அருணன், பார்த்தீபன் அயர்ந்தன் ஜனாதிபதி விருது பெற்றது பெரும் சாதனையாகும்.

**குருளைச் சாரணர் குழு :**

1922ல் யாழ் பரியோவான் கல்லூரியிலும் 1923ல் யாழ் மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலும் 1925ல் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியிலும் ஆரம்பிக்கப்பட்டது. கோப்பாய் கிறிஸ்தவ கல்னரி வட மாகாணத்தில் ஆரம்பிக்கப்பட்ட 4வது குருணைச் சாரணர் குழுவாகும். 1968ம்ஆண்டில் இருந்து 1970ம் ஆண்டு வரையும் குருணைச் சாரணர் குழு யாழ் மாவட்டத்தில் சிறந்த குழுவாக இயங்கி வந்தது. 1970ம் ஆண்டில் யாழ்மாவட்ட குருனைச் சாரணர் போட்டியில் யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த 20 குழுக்கள் பங்குபற்றியது. அதில் முதலாம் இடத்தை பெற்றது மகிழ்ச்சிக்குரியது. 1975 காலியில் நடைபெற்ற கபோறியில் இலங்கையில் உள்ள குருணைச் சாரணர்கள் குழுக்கள் பங்குபற்றியிருந்தார்கள். யாழ்ப்பாணத்தில் இருந்து கோப்பாய் கிறிஸ்தவ கல்னரி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம், கோப்பாய் நாவலர் மகா வித்தியாலயம், வீமன்காமம் மகா வித்தியாலயம், மகாஜனாக் கல்லூரி பங்குபற்றியிருந்தது.

அங்கு நடைபெற்ற போட்டியில் குருணைச் சாரணர் கீதம், நடனம் ஆகியவற்றில் முதலாம் இடத்தைக் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி பெற்றது.

அப்போது குருணைச் சாரணர் தலைவர்கள் (ஆசிரியர்கள்) திருமதி.C.S.ஆறுமுகம், திருமதி.G.S.சற்குணசிங்கம், திருமதி.வேதவல்லி கந்தையா (வலி கிழக்கு குருணைச் சாரணர் தலைவர்)

## ஜனாதிபதி விருது பெற்ற சாரணர் ஆசிரியர்களும் பழைய மாணவர்களும்

01. திருமதி.வேதவல்லி கந்தையா – பாராட்டுக்கடிதம் 1973
தகுதி சான்றிதழ் 1997

02. திரு.வே.சண்முகலிங்கம் தரு சின்னம் பெற்றவர்.
சாரண மாவட்ட ஆணையாளர் பாராட்டுக் கடிதம்

03. திரு.மா.புவனேந்திரன் தரு சின்னம், சாரணர் குருணைச் சாரணர் பயிற்றுனர் தலைவர் பயிற்சி, சாரணியத்தில் கெளரவ கலாநிதி பட்டம் பெற்றவர்.

கெளரவ ஜனாதிபதியால் திரு.ம.புவனேந்திரனுக்கு பின்வரும் விருதுகள் வழங்கப்பட்டது.

1977 – பாராட்டுக் கடிதம்
மகாதேசாதிபதி வில்லியம் கோபலாவ

1990 – குறிப்பு புத்தக பதிவு
சமாதான யாத்திரை கெளரவ R.பிரேமதாசா

1998 – திருமதி.சந்திரிக்கா பண்டாரநாயக்கா குமாரதுங்க
சேவைப் பதக்கம்

2002 – தகுதிகான் தகுதி மெடல் கெளரவ மகிந்தராஜபக்ஷ

2007 – வெள்ளித்தாமரை கெளரவ மகிந்தராஜபக்ஷ

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி யாழ் மாவட்டத்தில் 110 குழுக்களில் 10ம் குழுவாக 1921ல் சேர்ந்துள்ளது. சாரணர் தலைமைக் காரியாலயம் பதிவு செய்யும்படி கோரியபோது 01.10.1950ல் 94 இலக்கத்துடன் பதிவு செய்யப்பட்டது.

**சாரணிய கலாநிதி**
**மா.புவனேந்திரன் CLT**
**பழைய மாணவன் 1952 – 1955**
**கெளரவ மாவட்ட சாரண ஆணையாளர், கிளிநொச்சி.**

# கல்விப் பணியாற்றும் கிறிஸ்தவ கல்லூரி

வலி கிழக்கில் முதன் நிலைக் கல்லூரியாகவும் யாழ் மாவட்டத்தின் முன்னணிக் கல்லூரிகளில் ஒன்றாகவும், இயற்கை எழில்கொஞ்சும் அழகிய கோப்பாய்க் கிராமத்திலே கல்விப் பணியாற்றி வரும் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி யாராலும் மறக்க முடியாத அருங்கொடை ஆகும். கோப்பாய்க் கல்விக் கோட்டத்தி லுள்ள 1AB பாடசாலைகளுள் ஒன்றாகவும் திகழ்கின்றது.

இங்கே தன்னிறைவுடன் வாழ விவசாய வளம் ஊன்று கோலாக இருப்பதைப் போல கல்விவளம் பெருகுவதற்கு கல்லூரிச் சமூகத்தின் பணி இன்றியமையாததாகும். 160ஆண்டுகளையும் கடந்து பல கல்வி மான்களையும், கவிஞர்களையும், கலைஞர்களையும் உருவாக்கி சமூகத்தின் விடியலுக்குத் துணை புரிகின்றது கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி.

பல்வேறுபட்ட சமூகங்களிலிருந்து வரும் மாணவர்களை ஒன்றாக அரவணைத்து அவர்களின் ஆற்றல்களையும், ஆளுமை களையும் வளர்த்து அவர்களின் திறமைகளை உலகறியச் செய்கின்றது. பாரபட்சம் பார்க்காது கற்பிக்கும் ஆசிரியர்கள், அன்பால் வழி நடத்தும் அதிபர் என மாணவர்களை மென்மேலும் உயரச் செய்ய இக் கல்லூரி வழிகாட்டி நிற்கின்றது.

கற்றல் மாத்திரமன்றி விளையாட்டுத்துறை, சாரணியத்துறை என பல வழிகளில் மாணவர்களின் உயர்வுக்கு வழிகாட்டுகின்றது. அது மட்டுமல்லாது பாடசாலைகளில் கொண்டாடப்படும் விழாக்கள் மூலம் மாணவர்களிடையே ஒற்றுமை, அன்னியோன்னியம் போன்ற

நற்பண்புகளை வளர்ப்பதோடு ஆடல், பாடல், நாடகம் போன்ற அழகியல் கலைகளில் அவர்களை ஈடுபடுத்தி ஆற்றல்களையும், ஆளுமைகளையும் வளர்த்துக் கொண்டிருக்கின்றது.

இக் கல்லூரியில் மாறிவரும் சமகால வள வசதிகளும், அமைப்பும், கல்விப் பெறுபேறுகளும் முன்னணிப் பாடசாலை என்பதை வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றன.

நாகரிக மோகம் காரணமாக நகரப் பாடசாலைகளை நோக்கி மாணவர்கள் நகரும் சமகாலச் சூழலிலும் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி பெருமளவு மாணவர்களை வழிநடாத்தி வருகின்றமை இதன் கல்வித்துறை வளர்ச்சியினை மேலும் எடுத்துக் காட்டுகின்றது. "உண்மைக்கும் நேர்மைக்கும்" என்ற மகுட வாக்கியத்தை மனதிலே நிலை நிறுத்தி, கல்லூரி சமூகம் மாணவர்களை நல்வழிப்படுத்தும் தனது சேவையினை எந்நாளும் கடைப்பிடிக்கும் என்பதில் சிறிது கூட ஐயமில்லை.

***"வாழ்க கல்விப் பணி"***

நன்றி

**ஜெ.ஜெஸ்ரிகா**
**பேராதனைப் பல்கலைக்கழகம்,**
**முதலாம் ஆண்டு மாணவி.**



# மனித வாழ்வில் சமயத்தின் வகிபாகம்

இன்றைய நவீன உலகம் மிகவும் நுட்பமான தொழ்ல்நுட்ப வளர்ச்சியுடன் மிகவும் வேகமாக வளர்ந்து வருகின்றது. இந்த உலகின் நவீன மயமாதலின் வேகத்துக்கு அதனுடன் சேர்ந்து செல்வதற்காக மனிதன் தான் விரும்பியோ, விரும்பாமலோ கட்டாய நிர்ப்பந்தத்திற்கு ஆளாகின்றான். இதனால் தன்னுடைய உடல், உள ஆரோக்கியத்தை பொருட்படுத்தி அதன் வளர்ச்சிக்குத் தேவையான செயற்பாடுகளை ஒழுங்கமைப்பதற்கு கூட நேரமில்லாதவனாகவும் அதனைக் கருத்தில் வைத்திருப்பதற்கு தயார் இல்லாதவனாகவும் வாழப்பழகிக் கொண்டு வருகின்றான். இதன் விளைவாக அவன் புதிய புதிய நவீனமயமான பொருட்களை கண்டுபிடிக்கும் வேகத்தை விட வித்தியாசம் வித்தியாசமான மருந்துகள் கண்டுபிடிக்கப்படாத நோய்கள் பரவும் வேகம் முனைப்பாக காணப்படுகின்றது.

ஆனாலும் ஒவ்வொரு மனிதனும் இதை ஒரு பிரச்சனையாக பார்க்கவோ, எதிர்கொள்ள நாட்டம் காட்டவோ தயார் இல்லாதவனாக வருகிறான். இருந்தும் ஆரம்ப காலங்களில் நமது முன்னோர்கள் ஒவ்வொரு மனிதனும் தனது உடல், உள, சமூக, ஆன்மீகம், கல்வி ஆகிய ஆரோக்கியங்களை முதன்மைப்படுத்தி வாழ்வதற்காக பல விதமான விடயங்களை கடினமாகவும் நுணுக்கமாகவும் அறிந்து அதனைத் தொடர்ந்து கடைப்பிடிப்பதற்கு சிறந்த உத்தியாக கலாசாரம் என்பதை ஆயுதமாகப் பயன்படுத்தினார்கள்.

அதிலும் மிக விசேடமாக எமது சைவசமயத்தில் கலாசாரங் களூடாக மட்டுமன்றி நாம் தினம் தினமாற்றும் கருமங்கள் ஒவ்வொன்றுக்குள்ளாலும் ஆரோக்கியமாக வாழ்வதற்கு

நுணுக்கமான முறைகளையும் அக் கருமங்களை ஆற்றும் முறைகளின் ஊடாகவும் அதனைத் தொடர்ந்து கடைப்பிடிக்க பழகிக் கொண்டான். ஆனால் எல்லாத் திசைகளிலும் பல விதமான கோணங்களிலும் வெவ்வேறு விதமான மனிதர்களின் வேறுபட்ட சிந்தனைகளூடாகவும் ஆராய்ந்து பார்க்கையில் பிற சமயங்களை விட எல்லாச் செயல் களிலும் ஆரோக்கியத்தை கட்டியெழுப்புவதை மிக அழுத்தமாகக் காட்டுவது எமது சைவசமயமே என்பது தகுந்த விஞ்ஞான விளக்கத்துடன் கூற முடிகிறது. அதனைத் தொடர்ந்து கடைப்பிடிப்பது என்னமோ கடினமான ஒன்றாக இன்றைய மனிதர்களுக்குக் காணப்படுகிறது. இருந்தும் அதைக் கடைப்பிடித்து வந்த பெரியோர்கள் சரித்திரத்தில் இடம்பெற்ற மகான்கள், சைவசமய குருமார்கள் ஆகியோர் உயர்பதவியில் இருக்கிறார்கள்.

அதுமட்டுமன்றி கிறிஸ்தவ சமயமானது அதாவது கிறிஸ்தவ சமயத்தை கடைப்பிடிப்பவர்கள் கூட தங்களது ஆரோக்கியமான வாழ்விற் குறைகள் எதுவும் ஏற்படக் கூடாதவாறு இருப்பதற்கு முன்னோர்கள் பிறரது உடமைகளை விரும்பாது இருத்தல், மோகபாவம் செய்யாது இருத்தல், அவர்கள் அணியும் ஆடைகளை ஒழுங்காக அணிய வேண்டும், ஒருவனுக்கு ஒருத்தி என்ற மண வாழ்க்கை வாழ வேண்டும் ஆகிய பழக்கவழக்கங்களை இன்றும் தொடர்ந்து கடைப்பிடித்த வண்ணம் இருக்கிறார்கள்.

முஸ்லீம் இனத்தவர்கள் கூட தலைமுறை தலைமுறையாக தமது கலாசாரத்தை ஆரோக்கியமான வாழ்விற்காக அர்ப்பணித்து வாழ்கின்றனர். அதாவது பெண்கள் தலையில் இருந்து கால் வரை மூடிய ஆடை அணிய வேண்டும். முக்கியமாக அவர்களின் விசேட ஆடையான பரிதா அணிய வேண்டும். அவ்வாறு அணியும் பட்சத்தில் அவர்கள் சமூகத்தில் சிறந்த அந்தஸ்தில் இருப்பவராக

கருதப்படுவார்கள். அவர்கள் தாம் வழிபடும் அல்லாவை ஒரு தியானத்தில் வைத்து வழிபடுகிறார்கள். இதனூடாக அவர்கள் தமது மனதைக் கட்டுப்படுத்தி உள ஆரோக்கியத்தை சிறப்பாகப் பேணுகிறார்கள்.

இவ்வாறே பௌத்த சமயமும் பல அறக்கருத்துக்களைக் கூறுகிறது. அதிலும் பௌத்த சமயப் பெரியோர்கள் பல கலாசார விழுமியங்களை பின்பற்றி வாழ்ந்துள்ளனர். அத்தகைய கலாசாரங்கள் இன்றும் பின்பற்றப்பட்டு வருகின்றது. அதாவது களவு, கொலை, மோகபாவம் செய்யாதிருக்க வேண்டும். ஒரே கடவுள் வழி பாடாக இருக்க வேண்டும். பிறரின் உடைமைகளை விரும்பாதிருக்க வேண்டும். கடவுளின் பாதம் தொட்டு வணங்கும் போது சிறந்த நற்பேறு பெறலாம். புத்தபெருமானின் ஆரோக்கிய வழிகாட்டலில் வாழும் போது வாழ்க்கையில் உயர்ந்த நிலையை அடையலாம் போன்றவை வாழ்விற்கு சிறப்பான வழியைக் காட்டுகின்றது என நம்புகின்றார்கள்.

ஒவ்வொரு சமயமும் வாழ்விற்கான அத்திவாரத்தை வெவ்வேறு விதங்களில் கூறினாலும் அவற்றின் மூலக்கருத்து ஒன்றாகவே அமைகிறது. அதாவது ஒவ்வொருவரும் ஆரோக்கியமாகவும் சமூகத்தில் உயர்ந்த நிலையைப் பெற்று வாழ்வதற்கும் சமயக் கருத்துக்கள் சிறந்த வழியைக் காட்டுகின்றது. ஆகவே எமது வாழ்வில் சமயம் மிகவும் முக்கியமான பங்கை வகிக்கிறது. எனவே நாம் எமது சமய கலாசாரத்தைப் பின்பற்றி வாழ்வை ஆரோக்கியமாக எடுத்துச் செல்வோமாக.

***"வாழ்க வளமுடன்"***

நன்றி

**கு.நிறோஷாந்த்**
**13 Sci (2016)**

# ஊடக சுதந்திரம்

வளர்ந்து வருகின்ற நவீன உலகில் தொழில்நுட்ப வசதிகள் அதிகரித்துக் கொண்டு செல்கின்றது. உலகமோ சுருங்கியபடி செல்கிறது. அந்தளவிற்கு விஞ்ஞானமும், தொழில்நுட்பமும் வளர்ச்சி கண்டுவிட்டது. தகவல்களை அறிவதற்கும், பகிர்வதற்கும், எமது கருத்துக்களைச் சுதந்திரமாக வெளியிடுவதற்கும் இன்று ஊடகங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

ஊடகம் என்றால் அதில் அனைத்தும் அடங்கி விடும். தொலைக்காட்சி, வானொலி, பத்திரிகை, இணையத்தைப் பயன்படுத்தி உபயோகிக்கும் ஊடகங்களான முகவழிப் புத்தகம், கணனி, மின்னஞ்சல் போன்ற வசதிகள் மூலம் கருத்துக்களை வெளியிட முடிகின்றது. ஆதிகால மக்களில் ஆண்களை விடப் பெண்களை வீட்டிற்கு வெளியே காண்பதே அரிது. பெண்கள் முற்காலத்தில் வாயே திறப்பதில்லை. அவர்களுக்கு அதற்கான சந்தர்ப்பங்களும் வழங்கவில்லை. பெண்கள் எல்லாவற்றிற்கும் பணிந்து அடிமைகளாக அறையினுள் பூட்டி வைக்கப்பட்டிருந்தனர். ஆனால் இன்று அவர்களது கருத்துக்களை சுதந்திரமாக வெளியிடுவதற்கு பல வகையில் ஊடகங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

தொலைக்காட்சி, வானொலி போன்றவற்றில் பல நிகழ்வுகளை நடாத்தி அவற்றின் மூலம் அவர்களது கருத்துக்களை வெளியிட வாய்ப்பு வழங்கப்படுகிறது. உதாரணமாக தொலைக்காட்சியில் நடாத்தப்படும் சொல்வதெல்லாம் உண்மை, நடந்தது என்ன?

நம்பிக்கை என்பன மக்களின் வாழ்வையே திசை திருப்புகின்றன. அந்த நிகழ்வுகளில் வருவோரில் அதிகம் பாதிக்கப்பட்டு வருவோர் பெண்களே. அவர்களுக்கு நடைபெறும் பாலியல் துன்புறுத்தல், அடக்கியாளுதல் போன்றவை வெளியுலகிற்குத் தெரிவதில்லை. அவர்கள் அதனை சொல்வதற்கும் நம்பிக்கையானோர் கிடைப்பதில்லை. இத்தகையோரை வெளிக்கொண்டு வந்து அவர்களின் கருத்துக்களைச் சுதந்திரமாக கூறவிட்டு அவர்களுக்குரிய தீர்மானத்தையும் வழங்க ஊடகம் உதவுகின்றது.


பலர் இசை, நடனம் போன்றவற்றுள் திறமை பெற்றிருப்பர். ஏன் பல மாற்றுத் திறனாளிகள் பலரின் வியக்கத்தக்க திறமைகள் எல்லாம் இருக்கும்.ஆனால் யாருக்கும் தெரிவதில்லை. இவ்வாறானவர்களின் திறமைகளை வெளியுலகிற்கு கொண்டுவரப் பல நிகழ்வுகள் நடாத்தப் படுவதை தொலைக்காட்சி மூலம் அவதானிக்கின்றோம். பத்திரிகையும் ஒரு ஊடகமே. எங்கு என்ன நடந்தாலும் உடனே செய்தித் தாள்கள் மூலம் அனைத்து மக்களாலும் வாசித்து அறிய முடிகிறது.

இவ்வாறு பல நன்மைகளைச் செய்யும் ஊடகங்களை பலர் தீயவழியில் பயன்படுத்துகின்றனர். "வேப்பம் பூவிலும் சிறு தேன்துளி இருப்பது போல" நாம் எதை எடுத்துக் கொண்டாலும் அதில் நன்மையும், தீமையும் கலந்தே இருக்கும். தவறுகளை நம்மில் வைத்துக் கொண்டு பிற பொருட்களில் சாடுவது மனித இயல்பே. தொலைக்காட்சியில் பல விளம்பரங்கள் தேவையற்றதாக வெளியிடப் படுகின்றது. இந்த தேவையற்ற விளம்பரங்களின் மூலம் பலர் அழிந்துள்ளனர்.

பத்திரிகைகளை எடுத்து நோக்கினால் அதிலே நடுப்பகுதிகளில் சினிமா சம்பந்தமான பார்க்க முடியாத, வாசிக்க முடியாத விடயங்கள் பிரசுரிக்கப்படுகின்றன. "களவையும் கற்றுமற" என்பது உண்மைதான். எல்லாவற்றையும் கற்று தீயவற்றை கற்றதோடு விட வேண்டும். அதே போலவே எல்லோரும் செய்தால் எந்தப் பிரச்சினையும் வராது தடுக்கலாம்.

இணையப் பக்க ஊடகங்களை பலர் தவறான முறையில் உபயோகித்து வருகின்றனர். பலரது படத்தை எவ்வாறோ பெற்று அதனை ஆபாசப் படங்களோடு இணைத்து ஊடகங்களில் வெளியிடுகின்றனர். இதனால் பெண்கள் பலர் தற்கொலை கூட செய்துள்ளனர். சிலரது திருமண வாழ்க்கை தடைப்படுகின்றது.

எனவே நாமும் அன்னத்தினைப் போன்று அன்னம் எவ்வாறு நீர் கலந்த பாலில் நீரை விடுத்து பாலை மட்டும் அருந்துமோ அதுபோல நாமும் ஊடகங்களால் கிடைக்கும் நன்மைகளைப் பெற்று ஊடகங்களை நல்ல முறையில் பயன்படுத்தி தீமைகளை விடுத்து நல்லதோர் ஆரோக்கியமான சமுதாயத்தினை கட்டியெழுப்பு வோமாக.



**ந.சதுஷா**
**13 B (2016 கலை)**

# தங்கத் தமிழே என் மூச்சு

இம் மண்ணை
முத்தமிட முதலில்
சிணுங்கியபோது நான்
சிசுதான்
ஆனால் என் சிணுங்கல் கூட
தமிழ்மொழி தான்!

ஆசையாசையாய்
அரைவயதில் – அம்மா
என்றேன்...!
முதல் சொல்லே
என்தமிழ்ச் சொல்தான்...

ஆனால் இன்று எம்மவர்கள்
ஆங்கிலம் அன்றிய
ஆங்கிலத் தமிழை
தமிழ் என்று
கொச்சைப்படுத்துகிறார்கள்...

என் தமிழ் அன்றி
வேறேது – எனக்கு
உயிர் மொழி உண்டோ???

வர்ணனைகள் பல...
எண்ணங்கள் பல...
காதல் வாசகங்கள் பல...

மனித சோகங்கள் பல...
கச்சிதமாய் கவர்ச்சியாய்...
வேறெந்த மொழியில்
உரைத்திட முடியும்???

தமிழ் பேசு தமிழா
நீ
தமிழனாய் வாழு...!!
சகோதர மொழியவன் கூட
தமிழ் பேச – நம்
தமிழ் மொழியை ஏன் நாம்
துச்சமென நினைக்க வேண்டும்???

என் உயிர் மொழி
தங்கத் தமிழ் மொழி
என்று தமிழை – நான்
நினைக்கையில்
ஒவ்வொரு தமிழனும்
ஏன் நினைக்க
முடியாது???

வாழ வேண்டும் இன்றும்
நம் தமிழ்...
வளர வேண்டும் என்றும்
நம் தமிழ்ப் பேச்சுக்கள்...!!!
தங்கத் தமிழே
நம் உயிர் மூச்சு...!!!

**க.யசோதா**
**13 கலை 2016**

# பன்முக நுண்மதியும் (Multiple Intelligence) அவற்றை நடைமுறைப்படுத்தலும்

ஹொவாட் பல்கலைக்கழகத்தின் உளவியலாளர் "ஹொவாட் காடினர்" அவர்களால் முன்வைக்கப்பட்ட ஒன்பது நுண்மதிகளும் பன்முக நுண்மதி என அழைக்கப்படுகின்றது. அவர் பரந்த அடிப்படையில் 9 தனிப்பட்ட தன்மைகளாக நுண்மதியை வகுத்தார். பன்முக நுண்மதியின் ஒவ்வொரு தன்மையும் தனிப்பட இயங்கக் கூடியன எனக் கருதினார். இவ் எண்ணக்கருவானது அறிகை உளவியலாளர்களாலும் கல்வியாளர்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட தொன்றாகும். இவர்கள் ஒன்பது நுண்மதிகளையும் வளம்படுத்தக் கூடிய வகையில் பல பாடங்களின் ஊடாக மாணவர்களுக்குக் கற்பிப்பதனை ஏற்றுக் கொண்டுள்ளனர்.

01. தொழில்சார் நுண்மதி (Existentialist)
02. தர்க்க ரீதியான, கணித ரீதியான நுண்மதி (Logical / Mathematical)
03. ஆளக நுண்மதி (Intrapersonal)
04. ஆளிடை நுண்மதி (Interpersonal)
05. உடலசைவு சார் நுண்மதி (Bodily / Kinesthetic)
06. சங்கீதம் சார் நுண்மதி (Musical / Rhythmic)
07. மொழி சார் நுண்மதி (Verbal / Linguistic)
08. இயற்கை சார் நுண்மதி (Naturalist)
09. கட்புலன் சார் நுண்மதி (Visual / Spatial)

காட்னரின் கருத்துப்படி கற்றல் ஒரு சமூக மற்றும் உளவியல் செயல் முறையாகும். கார்டினர் முன்வைத்த பன்முன நுண்மதிக்

கோட்பாடானது மாணவர்களின் பன்முகப்பாடுகளை இணங்கண்டு அவர்களின் ஆற்றல்களை மதித்து அவர்களுக்குப் பொருத்தமான துறையில் அவர்களை ஆற்றுப்படுத்தலில் உதவக் கூடியது. இதனால் மாணவர்கள் ஊக்கம் பெற்று தமது ஆற்றல்களை வளர்க்க முனைவர்.

ஒரு பிள்ளை கல்வியைப் பெறும்போது அதன் அறிவு, திறன், மனப்பாங்கு, சமூகத்திறன் போன்ற பன்முன ஆளுமைக் கூறுகள் நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டே போக வேண்டும். இந்த ஆளுமைப் பண்புகளினூடாக அப்பிள்ளை குடும்பத்தில், சமூகத்தில் முன்மாதிரி மிக்கதாக மிளிர வேண்டும். இதுவே கல்வியின் அடிப்படை நோக்க மாகும். இவை சம அளவில் வளராவிட்டால் அல்லது வளர்க்கப்படா விட்டால் சிறந்த கல்வியை அந்தப் பிள்ளை பெற்றுக் கொள்ளவில்லை என்பதே அர்த்தமாகும்.

ஒரு மாணவனின் பரீட்சைப் பெறுபேற்றை மட்டும் வைத்து ஆளுமையை அளந்திட முடியாது. ஒரு மாணவனின் சிந்தனை, பொது நலன், பேச்சாற்றல், சன்மார்க்க விழுமியங்கள், பழக்க வழக்கங்கள், பண்பாடு, கட்டுப்பாடு போன்றவற்றைக் கொண்டே ஆளுமையை அளந்திட முடியும். கற்றதை நடைமுறைப்படுத்துவதும் அதனூடாகப் பெற்றுக்கொள்ளும் அனுபவமும் நிச்சயமாகத் தேவைப்படுகிறது. இத்தனையையும் வழங்கப் பாடசாலைச் சூழல் மட்டும் போதாது. வீட்டுச் சூழலும் அவற்றை ஊக்குவிப்பதாக அமைய வேண்டும். அப்போது தான் வினைத்திறன் மிக்கதொரு கல்வியை மாணவர்கள் பெற்றுக கொள்ள முடியும். இதனூடாகத்தான் மாணவர்கள் பன்முக ஆளுமையை விருத்தி செய்து கொள்ளவும் முடியும். அறிவைப் பெற்றுக் கொண்டவர்கள் அதை அடிப்படையாக வைத்து மேலும்

முன்னேற முடியும். அறிவுக் களஞ்சியங்களான நூல்கள், பத்திரிகைகள், சஞ்சிகைகள் வாசிக்கும் ஆர்வத்தைச் சிறுபராயத் திலேயே ஏற்படுத்த வேண்டும்.

பார்க்கின்றேன், ஞாபகமிருக்கின்றது, செய்கின்றேன், புரிந்து கொள்கின்றேன், ஆக்குகின்றேன், அகமகிழ்கின்றேன், கண்டு பிடிக்கின்றேன், சாதனையாளராகின்றேன் என்ற படிமுறைகளின் அடிப்படையில் மாணவர்களின் கைவண்ணத்தில் உருவாக்கப்பட்ட பல்வேறு பொருட்களும் ஆக்கத்திறன் செயற்பாட்டிற்கு சான்றாக அமையும். விஞ்ஞான ரீதியாகப் புதிய கண்டுபிடிப்புக்களை, புதிய ஆக்கத்திறன்களை அறிவதற்கு மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்கு வதினூடாக அவர்கள் தொடர்பாடல், சுற்றாடல், செயற்பாடுகள், பன்முக நுண்மதித் திறன்களை வளர்த்துக் கொள்கின்றார்கள்.

ஒரு பாடத்தைத் திட்டமிடும் போது இவ்வாறு 9 வகையான நுண்மதிகளுக்கு ஏற்பத் திட்டமிடுவதன் மூலம் மாணவர்களிடையே பன்முக நுண்மதியை வளர்த்துக் கொள்ளலாம். சொற்கள், எண்கள், படங்கள், சித்திரங்கள், இசை, பாட்டு, கருவிகள், சுய பிரதிபலிப்பு, செயல்நிலை அனுபவம், சமூக (இடைவினை) அனுபவம், நிஜ உலக அனுபவம் போன்ற விடயங்களைப் பிரயோகித்துக் கற்றல் செயற்பாடுகளில் ஈடுபடுவது மிகவும் பயனுள்ளதாக அமையும்.

கல்வி நிறுவனங்களில் புதிய கல்வி நுட்பக் கருவிகளான கணினி, தொலைக்காட்சி, வானொலிகளையும் எறிகருவிகளையும் பல்வேறு வகையான கற்பித்தல் முறைகளையும் பயன்படுத்துகின்றனர். அபிவிருத்தியடைந்த நாடுகளில் வன்பொருள் சார்ந்த கருவிகளின்

உதவியுடனும் மென்பொருட்களின் உதவியுடனும், புதிய கல்வி நுட்பங்களைக் கொண்டுதான் கல்வி கற்பிக்கப்படுகின்றது. எல்லா தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியல் மூலம் சிறந்த கல்வி நுட்பங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு, எளிதில் செய்திகளைக் கொண்டு செல்கின்றனர். இவை மாணவரின் அறிவு வளர்ச்சியில் முக்கிய அளவுகோலாக விளங்குகின்றது. இந்த கல்வி நுட்பங்களைப் பயன்படுத்தி கல்வி கற்பிக்கப்படுவதால் மாணவர்கள் எளிய முறையில் அறிந்து அவற்றைச் செயற்படுத்தவும், விரிவுபடுத்தவும் முற்படுகின்றனர்.

மாணவர்கள், அவர்கள் தங்கள் சொந்தப் பன்முக நுண்மதி பற்றி புரிந்துகொள்ளும் போது தாங்கள் புத்திசாலிகள் என்பதை புரிந்து கொள்ளத் தொடங்குவர். தங்கள் சொந்தக் கற்றலை நிர்வகிப்பார்கள். தங்கள் தனிப்பட்ட பலங்களை மதிப்பார்கள்.

***உசாத்துணை :***


01. த.கலாமணி, கல்விச் சீர்மியமும் பன்முக நுண்மதியும், அகவிழி, பெப்ரவரி 2009
02. வடக்கின் கல்வி முறைமை மீளாய்வு, வடமாகாணம்
03. சபா ஜெயராசா, ஆன்மீக நுண்மதி, ஆசிரியம், ஆகஸ்ட் 2011
04. ப.தயாபரன், பல்நிலை நுண்மதியின் பயன்பாடு, அகவிழி, யூன் 2010



**திருமதி.சுகந்தினி மதியானந்தன்**
**(ஆசிரியர், யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி)**
**B.SC (Special), PGDE**

நான் ஓய்வு பெற்ற ஆசிரியர்
ஓடி ஆடித் திரிந்த காலமெல்லாம் ஓடிப் போக
இன்று ஓய்வு என்ற பெயரில்
ஓரமாய் உட்கார்ந்துள்ளேன்.
காலையில் சிறுவர்களும் சிறுமிகளும்
சாரி சாரியாக சைக்கிள் வாகனங்களில்
"பாடசாலை சேவை" குறிகாட்டிச் செல்லும்
தனியார், அரச வாகனங்களிலும்
போதாதற்கு பெற்றோர் ஏற்றிச் செல்லும்
மோட்டார் சைக்கிள்களிலுமாய்
வீதியே நெருக்கேறும்
என் பேரப்பிள்ளைகளும் இப்படித்தான்
காலைப் பரபரப்பில் பரிதவித்துப் போகின்றனர்
நாங்கள் படித்த காலங்களை எண்ண
சிந்திப்பதா சிரிப்பதா எதுவும் தெரியவில்லை
சைக்கிளும் இல்லை மோட்டார் சைக்கிளும் இல்லை
இரண்டு நேரப் பள்ளியிலே
உடல் களைக்க கொண்டு போகும்
காலை(ச்) சாப்பாட்டுடன்
அரை மைல் ஒரு மைல் அதையும் தாண்டி
நடந்து சென்று வீடடைந்து மதியச் சோற்றை
மாலை உண்டுவிட்டு
ரியூசன் கிளாஸ்கள் பேசனல் வகுப்புகள்

ஏதும் இல்லாததால் சற்று இருந்து விட்டு
ஆடு மாட்டு வேலை பார்த்து
பொழுது பட சிலவேளை இரவுச் சாப்பாடும் செய்து
குப்பி விளக்கிலே – கொஞ்சம்
வசதி கூடியவர் மேசை விளக்கில்
பணக்காரர் என்ற பட்டம் சூட்டியவர்
மின்சார விளக்கிலும் படித்துத்தான் கரையேறினோம்
வசதிகள் குறைவாக இருந்ததால் தான்
இந்த வக்கத்த வாத்தி(த்) தொழிலுக்கு வந்தோமோ?
அதுவும் தெரியவில்லை
எங்கள் வாத்திமாரை – நாம்
கடவுளாகத் தான் கண்டோம்
கையெடுத்துக் கும்பிட்டோம்
காலடி மண் மேலே கால் வைக்கவும் – அஞ்சினோம்
தூரக் காணும் போதே தூக்கி வாரிப் போடும்
வகுப்பிலே இருக்கும் போது இருக்கை
நுனியில் தான் எமது இருப்பிருக்கும்.
வாத்தியார் லீவென்றால் அன்று அத்தி பூத்திருக்கும்
“செமினார்” என்று சொல்லி(ச்) சென்றதாய் நினைவில்லை
தரங்கணிப்பீடு கணிப்பீடு படிவங்கள் நிரப்பி
வகுப்பு நேரத்தைப் பாழடித்தாய் எமக்குத் தெரியவில்லை.
தர உள்ளீடு என்ற பெயரில் கடையில் விலைப்படாத
பொருளெல்லாம் கொண்டு வந்து மாணவர் முன்னால் நின்று
மானபங்கப்பட்டதாய்த் தெரியவில்லை
உள்ளக மேற்பார்வை வலயத்தில் இருந்தும்
மாகாணத்தில் இருந்தும் மேற்பார்வைக் குழு வந்து

ஏதும் எமக்கு முன்னால் ஆசிரியரைச் சொன்னதாய்(ச்)
சங்கடப்படவில்லை
யாருக்கும் போனில்லை அதனாலோ என்னவோ
வாத்திமாரின் போன் நம்பர் எமக்குத் தெரியவில்லை
வாத்திக்கும் "மிஸ்கோல்" போட்டு பேஷ்புக்கில்
அசிங்கமான படமெல்லாம் பார்க்க வைக்கவில்லை
இவை எல்லாம் இல்லாததால் எவற்றை நாமிழந்தோம்?
இவை எல்லாம் உள்ளதால் இன்றுள்ள மாணவர்கள்
எதை எல்லாம் பெற்றார்களோ? ஒன்றுமே புரியவில்லை
ஒன்று மட்டும் புரிகிறது ஓய்வு நிலை என்பதாலே
அதிகாரிமாரைக் கண்டு வயது வேறுபாடின்றி(ப்)
பயப்படத் தேவையில்லை
துணிவாகப் படலையில் நின்று சிரிக்க முடிகிறது.
சேட்டைகள் செய்து எமக்கு இரத்த அழுத்தம் தந்த
மாணவரிலும் இருந்து தப்பித்ததாய் ஓர் உணர்வு.

**செல்வி.நெ.காயத்திரி**
**(பழைய மாணவி ஆசிரியை**
**யா/வேலணை சரஸ்வதி வித்தியாலயம்)**



# உயர்தர வகுப்பில் புவியியல் பாடம் புகட்டிய ஆசான்கள் (1960 – 1970)

1960ம் ஆண்டளவில் யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியை உயர்நிலைக்கு கொண்டுவர முன்னின்று உழைத்தவர் காலஞ்சென்ற திருவாளர் மயில்வாகனம் இராஜசிங்கம் அவர்கள். (பதிவாளர் கச்சேரி) இவர் இக்காலத்தில் கல்லூரியின் பழைய மாணவசங்கச் செயலாளராகப் பணி புரிந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. அவரது தந்தையார் நிர்வாக உத்தியோகப் பதவிகளில் ஒன்றான உபதேசியார் என்ற பதவியினை வகித்தவர். கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கிய செயலாளர் மயில்வாகனம் இராஜசிங்கம் அவர்கள் கோப்பாய்க் கிராமத்து மக்கள் கல்வியில் உயர்பட்டம் பெற விழைந்தார் போலும். இதனால் கிறிஸ்தவ கல்லூரியின் தரத்தை உயர்த்த எண்ணினார். எனவே கல்லூரிக்குப் பொருத்தமான அதிபரை நியமிக்க முன்வந்தார். கல்லூரியின் பழைய மாணவனும் நுகேகொடவில் உள்ள பரிசென்ஜோசப் கல்லூரியில் அதிபராகப் பணிபுரிந்த திருவாளர் E.S.N.நவரட்ணராசாவை எமது பாடசாலைக்கு அதிபராக அழைத்து வந்தார். அதிபரும் செயலாளரின் நம்பிக்கைக்குப் பொருத்த மானவராகச் செயலாற்றினார். திருவாளர்.E.S.N.நவரட்ணராசா அதிபர் காலம் கல்லூரி வரலாற்றில் “பொற்காலம்” என குறிப்பிடலாம். இவர் காலத்தில் கல்லூரியில் க.பொ.த உயர்தர வகுப்பு ஆரம்பிக்கப் பட்டது. இவர் நிர்வாகத்திறமை மிக்கவராகக் காணப்பட்டார். அதிபர் பாடசாலைக்கு இடமாற்றலாகி வரும்பொழுது சிறந்த முறையில் கற்பித்தலை மேற்கொள்ளக் கூடிய ஆசிரியர் குழாம் ஒன்றினையும் தன்னுடன் அழைத்து வந்தார். அவ் ஆசிரியர்களாகப் பின்வருவோர் குறிப்பிடப்படுகின்றனர். திருவாளர்கள் விஸ்வநாதன் ஆசிரியர் அவர்கள் (தமிழ்), அரியபூசனம் ஆசிரியர் அவர்கள் (ஆங்கிலம்), இராசையா ஆசிரியர் அவர்கள் (உயிரியல்), திருமதி.இராசையா ஆசிரியர் அவர்கள் (தாவரவியல்), திருவாளர் E.C.A.நவரட்ணராசா ஆசிரியர் அவர்கள் (விஞ்ஞானம்) திருமதி சேதுகாவலர் ஆசிரியர் அவர்கள் (புவியியல்) பாடங்களைக் கற்பித்தனர்.

ஆரம்பகாலங்களில் கலைப் பிரிவில் தமிழ், புவியியல், அரசியல், வரலாறு ஆகிய பாடங்கள் மட்டும் கற்பிக்கப்பட்டன. (1960–1970) விஞ்ஞானப் பிரிவில் தாவரவியல், விலங்கியல் ஆகிய பாடங்களும், கணிதப் பிரிவில் தூயகணிதம், பிரயோக கணிதம் என்பனவும் இரசாயனவியல், பௌதிகவியல் இரு பிரிவுகளுக்கும் பொதுவாகக் கற்பிக்கப்பட்டது.

தமிழ் பாடத்தை காலஞ் சென்ற பண்டிதர் கந்தையா ஆசிரியரும், இலங்கை வரலாற்றினை காலஞ்சென்ற அதிபர் E.K.சண்முகநாதன் அவர்களும் ஐரோப்பிய வரலாற்றினை காலஞ்சென்ற ஆசிரியர் திருவாளர் சோமசுந்தரம் அவர்களும், அரசியல் பாடத்தை மறைந்த அதிபர் E.K.சண்முகநாதன் அவர்களும் 1968க்கு பிற்பட்ட காலத்தில் மறைந்த ஆசிரியர் திருவாளர் செல்வரட்ணம் அவர்களும் புவியியல் பாடத்தை 1967 வரை மறைந்த ஆசிரியர் திருமதி.சேதுகாவலர் அவர்களும் 1968 – 1970 வரை செல்வி.ஜொய்ஸ் அவர்கள் மற்றும் திருவாளர் கனகசிங்கம் ஆசிரியர் அவர்களும் கற்பித்தனர்.

புவியியல் ஆசான் திருமதி.சேதுகாவலர் அவர்கள் இடைநிலைக் கல்வியினை யா/ சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில் கற்றவர். இதனால் ஆங்கிலப் புலமையும் பெற்றார். உயர்கல்வியை இந்தியாவில் கற்று B.A பட்டத்தைப் பெற்றுக் கொண்டார். புவியியல், ஆங்கிலம் ஆகிய பாடங்களை பட்டப்படிப்பிற்காகத் தேர்ந்தெடுந்து இருந்தார்.

புவியியல் ஆசிரியரின் புன்சிரிப்பு ஒன்று அவரின் கல்விச் சிறப்பினை எடுத்துக்காட்டும். அமைதியான நடை, வகுப்பறையில் மாணவருக்கு பாடத்தைப் புகட்டும் பாங்கு அவருக்கே உரிய தனிச் சிறப்பு. புன்சிரிப்பாலேயே வகுப்பினைக் கட்டுப்படுத்தி விடுவார். வகுப்பறைக்கு ஏற்ற சத்தம் அவரிடம் காணப்படும். பாடங்களை பொருத்தமான துணைகொண்டு கற்பிப்பார். அக்காலத்தில் எமது பாடசாலையில் பிரமாண்டமான நூலகம் காணப்பட்டது. அங்கே கடமை புரிந்த நூலகப் பொறுப்பாளர் திருவாளர் வட்சன் அவர்கள் தேவையான உபகரணங்களை உடனுக்குடன் நூலகத்தில் இருந்து

வழங்குவார். அற்லஸ், படங்கள், புவியியல் புத்தகங்களை நூலகத்தில் இருந்து ஆசிரியர் பெற வழிகாட்டுவார். கற்பித்த விடயங்களை சிறந்த முறையில் மதிப்பீடு செய்து வாழங்குவார். சிறந்த கற்பித்தலினால் பொரும்பாலான மாணவர்கள் உயர்தர வகுப்பில் சித்தி பெற்றனர். இதனால் பல மாணவர்கள் இலங்கையில் பல்கலைக்கழகம் சென்று பட்டம் பெறவைத்த பெருமைக்குரியவர்.

ஆசிரியர் அவர்கள் ஆங்கிலத்தை ஒரு பாடமாகக் கற்று பட்டம் பெற்றமையால் ஆங்கிலப்புலமையும் பெற்றிருந்தார். இதனால் சாதாரண வகுப்புகளுக்கு ஆங்கிலம் ஒரு பாடமாகக் கற்பித்தார். அவரிடம் ஆங்கில இலக்கியம் கற்றவர் காலஞ் சென்ற கணக்குப் பரிசோதகர் திருவாளர் வல்லிபுரம் சிவலிங்கம் அவர்கள். இவர் திருமதி.சேதுகாவலர் ஆசிரியரிடம் ஆங்கிலம் கற்றவர். நான் ஆசிரியர் பற்றி எழுதும்படி பலரிடம் கேட்டேன். இவரிடம் கேட்ட பொழுது அவர் பற்றி கூறியவற்றைத் தருகிறேன். தான் ஆங்கிலம் சிறந்த முறையில் எழுத, வாசிப்பதற்கு முக்கிய காரணம் திருமதி.சேதுகாவலர் ஆசிரியர் அவர்கள் தான் எனத் தெரிவித்தார். அவர் தனக்கு ஆங்கில இலக்கியத்தை சிறப்பாகக் கற்பித்தார் எனக் கூறினார். அன்றைய பட்டதாரி ஆசிரியர்கள் ஆங்கில அறிவு பெற்று இருந்தனர். இதனால் எங்கு சென்றாலும் வேலை பெறக் கூடியவர்களாக விளங்கினர்.

ஆசிரியர் அவர்கள் உயர்தர வகுப்பு ஆசிரியராகவும் பணி புரிந்தார். மாணவர்களை நல்ல வழியில் வழி நடாத்திய பெருமைக் குரியவர். இணைப்பாடவிதானச் செயற்பாட்டிலும் பங்கு ஏற்றவர். “பீற்றோ” இல்ல ஆசிரியராகப் பணிபுரிந்து விளையாட்டுப் போட்டிகளை சிறப்பாக நடாத்த உதவினார். கிறிஸ்தவராக இருந்த மையால் தேவாலயத்திற்குச் சென்று வழிபாடுகளில் பங்கேற்று மாணவர்களுக்கும் வழிகாட்டினார். இவரின் கணவர் திருவாளர் சேதுகாவலர் ஆசிரியர் அவர்கள் சிறந்த பௌதிகவியல் ஆசியராக யா/ மத்திய கல்லூரியில் பணி புரிந்தவர். ஆசிரியர் அவர்கள் எமது பாடசாலைக்கு வருகைதந்த காலத்தில் ஒரு ஆண் மகனுக்கு தாயானார். பாடசாலைக்கு அருகாமையில் வசித்தமையால்

பாடசாலைக்கு நேரத்திற்கு வருகை தருவார். சிறந்த ஆசிரியர் அவர்கள் 1967ம் ஆண்டளவில் நோயின் பிடியில் சிக்கினார். இதனால் சேவையில் இருந்து ஓய்வு பெற்றார்.

ஆசிரியரிடம் கல்வி கற்ற மாணவர்களில் மூவர் புவியியல் பாடத்தில் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் சிறப்புப் பட்டதாரியாகப் பட்டம் பெற்றனர். திருமதி.அற்புதமலர் ஆசிரியர் அவர்கள் ஆசிரியராகப் பணிபுரிந்து அவுஸ்ரேலியா சென்று ஆசிரியப் பணி புரிகிறார். திருமதி.அரவிந்தகுமாரி லோகேஸ்வரன் அவர்கள் ஆசிரியராகப் பணிபுரிந்து அமரத்துவம் அடைந்து விட்டார். திருமதி.சறோஜா சிவச்சந்திரன் அவர்கள் யாழ்ப்பாணத்தில் பெண்ணிய அமைப்பின் தலைவியாகப் பணிபுரிகிறார். ஏனையவர்கள் சாதாரணபட்டம் பெற்றவர்கள். புவியியலை ஒரு பாடமாகக் கற்று பட்டம் பெற்றனர். ஒரு புவியியல் பரம்பரையை கிறிஸ்தவ கல்லூரியில் தோற்றுவித்த பெருமைக்குரியவர்.

சேதுகாவலர், ஜொய்ஸ் ஆசிரியரிடம் கல்வி கற்ற மாணவர் களில் ஒருவர் திருமதி.சுவர்ணலீலா பிரமரட்ணா. இவர் ஆசிரிய கலாசாலை, கல்விக் கல்லூரிகளின் தமிழ் பிரிவிற்குப் பொறுப்பாக கல்வி அமைச்சில் 1990 – 1993 காலப்பகுதியில் கடமையாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது.

முன்னைய பழைய மாணவசங்கச் செயலாளர் செல்வி வசந்தமாலினி இராசசிங்கம் அவர்கள் எமது பாடசாலையில் இருந்து பல்கலைக்கழகம் சென்றவர். இவர் எமது பாடசாலையில் இருந்து சட்டத்துறைக்குத் தெரிவு செய்யப்பட்ட முதலாவது மாணவர் என்ற பெருமைக்குரியவர். இவர் கனடாவில் வசிக்கிறார். முதியோருக்குக் கற்பித்தலை மேற்கொள்கிறார். திருவாளர் அரியபாலனைக் கரம் பற்றி னார். இரு ஆண் பிள்ளைகளின் தாயாவார். திருமதி.வசந்தமாலினி அவர்கள் ஒரு சட்டத்தரணியாவார். அத்துடன் முன்னைய பழைய மாணவசங்கச் செயலாளர் இராசசிங்கம் அவர்களின் இரண்டாவது புதல்வி என்பதும் குறிப்பிடத்தக்கது.

திருவாளர் ஐயம் பெருமாள் அவர்கள் எமது பாடசாலையில் இருந்து பல்கலைக்கழகம் தெரிவு செய்யப்பட்டார். பொறியியல் கற்றவர். வங்கி முகாமையாளராகப் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர்.

இருபாலையைச் சேர்ந்த செல்வி ஜொய்ஸ் அவர்கள் 1967ம் ஆண்டு காலப்பகுதியில் புவியியல் பாடத்தைக் கற்பிக்க வசதிக்கட்டண ஆசிரியராக பாடசாலைக்கு வருகை தந்தார். இவர் இடைநிலைக் கல்வியை யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில் பெற்றவர். உயர்கல்வியை பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கற்று B.A பட்டம் பெற்றவர். உருவில் சிறியவர். செயலில் பெரியவர். ஆசிரியர் வகுப்பிற்கு வரும்பொழுது ஒரு சிரிப்புடன் தான் உள்நுழைவார். சிறந்த முறையில் எமக்கு புவியியல் பாடத்தை குறுகிய காலத்தில் கற்பித்த பெருமைக்குரியவர். கற்பித்தலை திட்டமிட்டுச் செய்பவர். வெள்ளிக்கிழமைகளில் வீட்டு வேலைகள் தருவார். திங்கட் கிழமைகளில் அது சமர்ப்பிக்கப்பட வேண்டும். உடனேயே அதனை மதிப்பீடு செய்து வழங்குவார். பரீட்சைகள், கட்டுரைகள் (Tutes) எழுது வித்துத் திருத்தம் செய்து தருவார். விரைவாகவும், விளக்கமாகவும் கற்பித்தலை மேற்கொள்வார். அவர் செயல்முறையிலும் கற்பித்தலை மேற் கொண்டார். 1969ம் ஆண்டளவில் கல்விக் கண்காட்சி பாடசாலைகளில் நடைபெற்றது. மகாவலித் திட்டத்தை செயன் முறையில் செய்வித்தார். அதற்காக களிமண்ணில் மகாவலித் திட்டத்தை உரு அமைப்பித்து விளக்கம் கொடுக்க வைத்தார். சிறப்பாக வேலை செய்த ஆசிரியர் எமக்கு கல்வி கற்பித்தகாலம் பட்டதாரிகள் வேலை வாய்ப்பின்றி இருந்தனர். இதனால் வெளிநாடுகளின் ஈர்ப்பு விசையினால் கவரப்பட்டனர். ஆசிரியரும் அத்தகைய ஈர்ப்பு விசையால் கவரப்பட்டார். இதனால் ஆபிரிக்க நாடான எதியோப்பியா விற்கு ஆசிரியப் பணியை மேற்கொள்ள பயணமானார். ஆங்கிலப் புலமை அதற்கு துணையாக இருந்தது. இதனால் மீண்டும் புவியியல் பாடம் கற்பிக்க செங்குந்தா இந்துக் கல்லூரியில் இருந்த திருவாளர் கனகசிங்கம் ஆசிரியர் அவர்கள் பாடசாலைக்கு மாற்றலாகி வருகை தந்தார்.

ஆசிரியர் அவர்கள் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் இடைநிலைக் கல்வியைப் பெற்றவர். கல்கத்தாவில் உயர் கல்வியைக் கற்று B.A பட்டம் பெற்றவர். புவியியல், ஆங்கிலம், பொருளியல் ஆகிய பாடங்களைக் கற்றவர். இவர் நகைச் சுவையுடன் கற்பித்தலை மேற்கொள்வார். இதனால் வகுப்பறையில் மாணவர்களின் சிரிப்பு ஒலி கேட்கும். இவரும் கற்பித்தலை சிறப்புடன் மேற்கொண்டார். இவர் 1983ம் ஆண்டு வரை பாடசாலையில் கல்வி கற்பித்து தனது சேவையை நிறைவு செய்தார். ஆசிரியர் அவர்கள் வருகை தந்த சிறிது காலத்தில் நான் பரீட்சைக்குத் தோற்றினேன் (1970) நீண்ட காலம் இவரிடம் கல்வி கற்கவில்லை. மாணவர்களிடம் நல்ல முறையில் பழகும் தன்மையுடையவர். பாடசாலைக்கு அருகாமையில் வசித்தவர். இணைபாடச் செயற்பாடுகளிலும் பங்கேற்றவர். இவரின் பிள்ளைகள் எமது பாடசாலையில் கல்வி கற்று ஐரோப்பிய நாடுகளில் வசிக்கின்றனர்.

சேதுகாவலர் ஆசிரியர் அவர்கள் 6 ஆண்டுகள் வரை உயர்தர வகுப்பில் புவியியல் பாடத்தைக் கற்பித்தார். 15, 20 பேரை பல்கலைக்கழகம் சென்று பட்டம் பெற வைத்தார். ஆசிரியர் “ஜொயிஸ்” காலத்தில் 10 பேர் வரை பல்கலைக்கழகம் சென்று பட்டம் பெற்றனர். பட்டம் பெற்றவர்களில் பெரும்பாலானவர்கள் ஆசிரியப் பணியினை மேற்கொண்டார்கள்.

எமக்கு புவியியல் பாடம் பாடசாலையில் கற்பிக்கப்பட்ட போதும் பாடத்திட்டம் ஆசிரியர் இன்மையால் பூர்த்தி செய்யப்பட வில்லை. இக்காலத்தில் கலாநிதி குணராசா, திருவாளர். இராஜகோபால், திருவாளர்.பரமேஸ்வரன் அவர்களால் இணைந்து வெளியிடப்பட்ட “புவியியலாளன்” சஞ்சிகையும் எமக்கு புவியியல் பாடத்தைக் கற்பதற்குதவியது என்பது கூறிகொள்ள வேண்டியது எமது கடமை.

"ஆசிரியர்கள் சமூகத்தை உருவாக்கும் சிற்பிகள்" என கூறப்படுகின்றது. இவ்வகையில் உருவாக்கிய சிற்பங்களை நோக்குதல் பொருத்தமானது. ஆசிரியர் திருமதி.சேதுகாவலர் காலத்தில் கல்வி கற்றவர் திருவாளர் கணேசன் அவர்கள். அவர் ஒரு கலைப்பட்டதாரி. இவர்ஒரு ஆசிரியராகவும், அதிபராகவும், இறுதியில் கோட்ட கல்வி அதிகாரியாக சேவையை நிறைவு செய்தார். இவரிடம் கல்வி கற்று பட்டம் பெற்றவர்களில் பெரும்பாலானோர்கள் ஆசிரியராகப் பணிபுரிந்தனர். சிலர் வங்கிகளிலும், சிலர் நிர்வாக மையங்களிலும், சிலர் திட்டமிடல் அதிகாரிகளாகவும் விளங்கு கிறார்கள்.

ஆசிரியர் ஜொய்ஸ் காலத்திலும் ஆசிரியர் கனகசிங்கம் அவர்களிடம் கல்வி கற்றவர்களில் பெரும்பாலானோர் ஆசிரியராகப் பணி புரிந்தனர். இன்றும் சிலர் ஆசிரியர், அதிபராகப் பணி புரிந்தனர். திருவாளர் முத்துக்குமாரசாமி நாவற்குழி மகா வித்தியாலயம், கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி, பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி ஆகியவற்றில் அதிபராகக் கடமையாற்றினார். திருவாளர் கே.வி.குணசேகரம் அவர்கள் ஆசிரியராகவும், கோப்பாய் நாவலர் பாடசாலை அதிபராகவும் கடமையாற்றினார். ஈற்றில் நல்லூர்க் கோட்டக்கல்வி அதிகாரியாகப் பணிபுரிந்து சேவையை நிறைவு செய்தார். திருவாளர் சத்தியநாதன் அவர்கள் ஆசிரியர், அதிபர், கோட்டக்கல்வி அதிகாரியாக பணியாற்றினார். திருவாளர் நடேசபிள்ளை அவர்கள் உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரியாக (S.L.A.S) பணி புரிந்தார்.

எமது பாடசாலையில் கல்வி கற்று பட்டம் பெற்று உயர் பதவிகளைப் பெற வழிவகுத்த ஆசான்களை எமது மனதில் நினைவு கூர்ந்து கட்டுரையை நிறைவு செய்கிறேன்.

**செல்வி.ம.கந்தையா**
**ஆசிரியர், ஓய்வுநிலை**
B.A.Dip.in Edu.M.Phil.

# கல்லூரிக் கீதம்

இராகம்: ஹம்சத்வனி

வாழிய நம் கலைக் கூடமே வாழ்க
வாழிய வாழிய வாழியவே
களனிகள் சூழ்ந்திடு கோவையம் பதியில்
விளங்கு நற் கிறிஸ்தவ கல்லூரி
உண்மையும் நேர்மையும் உவந்திட அளிக்கும்
உன்புகழ் என்றென்றும் வாழியவே. (வாழிய)

பல்புகழ் மலிந்திடும் பல பெரியோர்களைப்
படைத்து நற்பணி புரிந்தாய்
அவர் மிகு சேவையை ஏத்திட நன்னிலை
அடைந்த நல்நா டெமதே (வாழிய)


மனதினிலுன்றிறம் மதிப்பொடு நிலைத்திட
மகிழ்வோடு நாம் முயல்வோம்
கலை பல கவினுறக் கனிந்திட நல்வழி
காட்டிடு வாய் தாயே. (வாழிய)

நிலமிசை நின்புகழ் நீடு வாழ்க
நின்பணி தொடர்ந்து என்றும் வாழ்க
நிலைபெறு கலைகளின் நிறைகுடமாக
நீ யென்றும் வாழிய வாழியவே. (வாழிய)

# நன்றி நவிலல்

27.12.2015 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற அமரத்துவ அதிபர் தின நிகழ்வில் பங்கேற்று சிறப்பித்தவர்களுக்கும், சுவடு சஞ்சிகைக்கு ஆக்கங்கள் தந்தவர்களுக்கும், அச்சுப்பதித்து வழங்கிய சிவரஞ்சனம் பதிப்பகத்தினருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*நிர்வாகிகள்,*
*பழைய மாணவர் சங்கம்,*
*யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி.*



சிவரஞ்சனம். 077 3068982